## 3.3 2000–01 – நமக்கு நாமே திட்டத்திற்காக ஒதுக்கீடு–ரூ.30 கோடியாக உயர்த்துதல்

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ்.ஒய்) துறை

அரசாணை (நிலை) எண்.135 நாள் : 24.05.2000

படிக்க :

1. ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.77, நாள்.19.04.1999
2. அரசு நேர்முக கடித எண்.14144/ எஸ்.ஜி.எஸ்.ஒய்/2000, நாள்.03.04.2000
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நே.மு.கடித எண்.32092/2000 திட்டம் – 4, நாள்.07.04.2000

**ஆணை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2000–2001–ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

"13. நமக்கு நாமே திட்டம் மக்களிடையே பெற்றுள்ள நல்ல வரவேற்பின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் ரூ.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பொதுமக்களுடைய பங்கேற்பு அதிகரிக்கும்போது அதற்கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

14. பல்வேறு கிராமங்களில் பிறந்தோர், தமிழ்நாட்டிலும், இந்தியாவில் பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் (Non- resident Indian) சீரோடும் சிறப்போடும் வாழ்கின்றனர். ஒவ்வொருவருக்கும் சொந்த ஊரின் மீது தனிப்பற்று உண்டு. எனவே, அவர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள் அமைக்க நிதி உதவி அளித்தால் அவர்கள் பெயரோ அல்லது அவர்களது பெற்றோர், உறவினர் பெயரோ சூட்டப்படும்."

2. முன்பத்தியில் குறிப்பிட்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவிப்புகளை முனைப்புடன் செயல்படுத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஊரக வளர்ச்சி இயக்குநரும் இது குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. 2000–2001–ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்பட்டுள்ள கருத்துருக்களை அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது.

(1) 1999–2000–ம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துவதற்காக விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.77, நாள் 19.04.99ல் வெளியிடப்பட்டது. இந்த ஆணைகள் 2000–2001–ம் ஆண்டிலும் கீழ் குறிப்பிட்டிருக்கும் மாறுதலுக்குட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

(2) 2000–2001–ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.30 கோடியில் முதல் தவணையாக ரூ.15 கோடியை (50% ) நிதித்துறையின் அரசாணை நிலை எண்.737 நிதி (வழிவகை) துறை, நாள்.28.12.98–ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு நிதியை விடுவிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. முதல் தவணையாக விடுவிக்கப்பட்ட தொகைக்கான செலவு விபரப்பட்டியல்கள் பெற்று பின்பு அதற்கான கணக்குப் பட்டியலுடன் மீதமுள்ள ரூ.15 கோடியை நிதித்துறையின் இசைவினைப் பெற்று கூடுதல் நிதி கோரும் மாவட்டங்களுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் விடுவிக்க வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது. முதல் தவணை நிதியாக விடுவிக்கப்படும் ரூ.15 (ரூபாய் பதினைந்து) கோடிக்கான விபரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(3) இத்திட்ட நிதியை தெருக்கள், சாலைகள் அமைத்தல், பள்ளி கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக உள்ளாட்சி அமைப்புகள் செலவிட வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

(4) அயல்நாடுகளில் வாழும் குடியுரிமை பெறாத இந்தியர்களில், தமிழர்கள் தங்களது சொந்த ஊரில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நன்கொடை அளிப்பதில் அதிக ஆர்வம் உள்ளவராய் இருக்கின்றனர். இத்திட்டத்திற்காகவென்றே 'www.tn.gov.in' என்ற தகவல் தளத்தை (website) தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதியை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முழுமையாகப் பயன்படுத்தி அயல்நாடுகளில் வாழும் குடியுரிமை பெறாத இந்தியர்களில் குறிப்பாக தமிழர்களை

ஈடுபடுத்தி இத்திட்டத்தை மேலும் சிறந்த முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. முன்பத்தி 3(2)–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தின்படி ஊரக வளர்ச்சி இயக்குநரால் விடுவிக்கப்படும் முதல் தவணையான ரூ.15 கோடி (ரூபாய் பதினைந்து கோடி) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800 ஏனைய செலவு –ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – ஜே.டபிள்யூ– நமக்கு நாமே திட்டத்தைச் செயல்படுத்துதல் –09 உதவி மானியங்கள் –02 மூலதனச் செலவுக்கான மானியங்கள்" (து.தொ.கு.எண்.2515 –00–800 ஜே,டபிள்யூ 0925)

5. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.318/SS(GV) / 2000–1, நாள்.24.05.2000–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

**3. NNT**

## இணைப்பு – 1

அரசாணை (நிலை) எண்.135 ஊரக வளர்ச்சித்துறை, நாள்.24.05.2000
2000–2001–ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்திற்காக அறிவிக்கப்பட்டுள்ள ரூ.30 கோடியில் முதல் தவணை நிதியாக ரூ.15 கோடி (ரூபாய் பதினைந்து கோடி) பிரித்து அளித்தல்
மாவட்டங்களிலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் நிதி ஒதுக்கீடு
(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | மொத்த ஒதுக்கீடு | வட்டாரங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை | பேரூராட்சி களுக்கு ஒதுக்கப்படும் தொகை | நகராட்சி களுக்கு ஒதுக்கப்படும் தொகை | மாநகராட்சி களுக்கு ஒதுக்கப்படும் தொகை | முதல் தவணை ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 93.360 | 30.00 | 6.930 | 9.750 | 0.00 | 46.680 |
| 2 | திருவள்ளூர் | 96.390 | 33.00 | 5.070 | 10.125 | 0.00 | 48.195 |
| 3 | கடலூர் | 104.200 | 39.00 | 3.975 | 7.125 | 0.00 | 50.100 |
| 4 | விழுப்புரம் | 74.220 | 30.00 | 4.110 | 3.000 | 0.00 | 37.110 |
| 5 | வேலூர் | 126.660 | 45.00 | 7.080 | 11.250 | 0.00 | 63.330 |
| 6 | திருவண்ணாமலை | 105.030 | 45.00 | 2.265 | 5.250 | 0.00 | 52.515 |
| 7 | சேலம் | 159.870 | 37.50 | 8.310 | 4.125 | 30.00 | 79.935 |
| 8 | நாமக்கல் | 97.080 | 37.50 | 5.040 | 6.000 | 0.00 | 48.540 |
| 9 | தர்மபுரி | 77.100 | 30.00 | 4.425 | 4.125 | 0.00 | 38.550 |
| 10 | ஈரோடு | 120.510 | 39.00 | 14.505 | 6.750 | 0.00 | 60.255 |
| 11 | கோயம்புத்தூர் | 194.850 | 45.00 | 14.175 | 8.250 | 30.00 | 97.425 |
| 12 | நீலகிரி | 39.090 | 12.00 | 3.420 | 4.125 | 0.00 | 19.545 |
| 13 | தஞ்சாவூர் | 98.310 | 37.50 | 5.280 | 6.375 | 0.00 | 49.155 |
| 14 | நாகப்பட்டிணம் | 80.670 | 33.00 | 2.460 | 4.875 | 0.00 | 40.335 |
| 15 | திருவாரூர் | 72.750 | 30.00 | 1.875 | 4.500 | 0.00 | 36.375 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 148.620 | 37.50 | 4.560 | 2.250 | 30.00 | 74.310 |
| 17 | கரூர் | 61.080 | 24.00 | 3.165 | 3.375 | 0.00 | 30.540 |
| 18 | பெரம்பலூர் | 63.840 | 30.00 | 1.920 | 0.00 | 0.00 | 31.920 |
| 19 | புதுக்கோட்டை | 88.140 | 39.00 | 2.070 | 3.000 | 0.00 | 44.070 |
| 20 | மதுரை | 152.610 | 39.00 | 3.930 | 3.375 | 30.00 | 76.305 |
| 21 | தேனி | 70.410 | 24.00 | 5.580 | 5.625 | 0.00 | 35.205 |
| 22 | திண்டுக்கல் | 93.090 | 34.50 | 6.045 | 6.000 | 0.00 | 46.545 |
| 23 | இராமநாதபுரம் | 62.550 | 27.00 | 2.025 | 2.250 | 0.00 | 31.275 |
| 24 | விருதுநகர் | 76.470 | 27.00 | 2.235 | 9.000 | 0.00 | 38.235 |
| 25 | சிவகங்கை | 80.070 | 33.00 | 2.910 | 4.125 | 0.00 | 40.035 |
| 26 | திருநெல்வேலி | 165.150 | 37.50 | 9.450 | 5.625 | 30.00 | 82.575 |
| 27 | தூத்துக்குடி | 81.180 | 31.50 | 4.965 | 4.125 | 0.00 | 40.590 |
| 28 | கன்னியாகுமரி | 80.700 | 22.50 | 12.225 | 5.625 | 0.00 | 40.350 |
| 29 | சென்னை | 240.000 | 0.00 | 0.00 | 0.00 | 120.00 | 120.00 |
| | மொத்தம் | 3000.000 | 930.00 | 150.00 | 150.00 | 270.00 | 1500.00 |

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்